உறுப்பினர்களுமே கொடுத்திருக்கிறார்கள். அரசினுடைய நிதி நிலையையும், அங்கே இருக்கின்ற மருத்துவமனையினுடைய தகுதியையும் கருத்தில் கொண்டு, இந்த அரசு ஆவனச் செயல்ளை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆர். மூக்கன் : தலைவர் அவர்களே, என்னுடைய மலைவாழ்த் தொகுதி தனியாக பரிசீலிக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : தலைவர் அவர்களே, இன்றைய தமிழக முதல்வர் டாக்டர் கலைஞரை விட, மலைவாழ் மக்களின் மீதும், தாழ்த்தப்பட்ட மக்களின் மீதும் அதிக அக்கறை கொண்டவர்கள் யாரும் இருப்ப தாக எனக்குத் தெரியவில்லை. நிச்சயமாக அதற்கான முயற்சிகள் விரைவில் எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த வினா.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த உறுப்பினர் நான் இன்று வரமாட்டேன், மற்றொரு நாள் நான் வருகின்ற போது இந்தக் கேள்வியை எழுப்பலாம் என்று என்னிடம் கேட்டுக்கொண்டார்கள். நீங்கள் அனுமதிப்பீர்கள் என்று சொன்னால், வேறு ஒரு நாளைக்கு இந்தக் கேள்வியை எடுத்துக்கொள்ளலாம் என்று நினைக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 165 மாண்புமிகு அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்தி வைக்கப்படுகிறது.

பொற்பந்தல் கிராமத்தில் துணைமின் நிலையம்

166—(*வினா எண். 361) திரு. கே. சுந்தர் : மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா—

உத்திரமேரூர் ஒன்றியம் சாலவாக்கம் பகுதியில் பொற் பந்தல் கிராமத்தில் புதிதாக துணை மின் நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு தலைவர் அவர்களே, செங்கற்பட்டிற்கும் மதுராந்தகத் திற்கும் இடைப்பட்ட பகுதியில் மின்தேவையின் மையப்பகுதியாக புக்கத்துறை என்ற கிராமம் உள்ளதால் பொற் பந்தலுக்குப் பதிலாக புக்கத்துறையில் துணை மின்நிலையம் அமைக்கும் திட்டம் ஆய்வில் உள்ளது.

1989 ஏப்ரல் 29]

திரு. கே. சுந்தர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திட்டம் ஆய்வில் உள்ளது என்று சொன்னதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். தற்போது அந்தப் பகுதியில் 50 கிராமங்களில் உள்ள 20 ஆயிரம் விவசாயிகள் சரியான மின் வசதி இல்லாமல் மிகுந்த துயரத்திற்கு உள்ளாகியிருக்கிறார்கள். ஆகவே இந்தத் திட்டம் விரைவில் செயல்படுத்தப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : தலைவர் அவர்களே, விரைவில் செயல்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. சுந்தர் : தலைவர் அவர்களே, அடுத்த ஆண்டில் செயல்படுத்தப்படுமா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விரைவில் என்றால், அதற்கு என்ன பொருள் என்று கேட்கிறார்கள்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : தலைவர் அவர்களே, நிலம் கையகப்படுத்துவதற்கு ஆவன செய்து கொண்டிருக்கிறார்கள். நிலம் கையகப்படுத்தப்பட்டவுடன் அது நிறைவேற்றப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சென்னை காசிமேடு மீன்பிடித் துறைமுகம்.

167—(* வினா எண் 1316) **திரு. இரா. மதிவாணன் :** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை காசிமேடு மீன்பிடித் துறைமுகம் பழுதடைந்துள்ளதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அதனை சீர்செய்ய அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ): சென்னை மீன்பிடித் துறைமுகம் நல்ல முறையில் இயங்கி வருகிறது. இதில் பழுது ஏதும் ஏற்படவில்லை.

திரு. இரா. மதிவாணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராயபுரம் மீன்பிடித் துறைமுகத்திற்கு சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர் பெயர் சூட்டப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.